இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

மோட்டார் வாகன விபத்தின் ஊடாக மூன்றாம் தரப்பிரனருக்கு ஏற்படும் மரணம் அல்லது நிரந்தர ஊனம் என்பவற்றுக்கு இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கான விருப்பத் தேர்வு (Optional)

2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் கீழ் பதிவுசெய்த பொதுக் காப்புறுதி நிறுவனங்களுக்கான சுற்றுநிரூபம்

திகதி: 26.02.2024 **2024 இலக்கம் 03**

<u>முன்னுரை</u>

1. இந்த முறையானது, மோட்டார் வாகன விபத்துகளுக்கு முகம்கொடுக்கும் கீழே 03ஆம் பந்தியில் குறிப்பிப்பட்டுள்ள மூன்றாந்தரப்பு இழப்பீட்டுக்கு அல்லது 04ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவர்களின் சட்ட ரீதியான உரிமையாளருக்கு, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு அப்பால் இழப்பீட்டினை வழங்கும் வகையிலான விருப்பத்தேர்வு முறையாகும்.

இந்த முறைமை செயற்படுவதன் ஊடாக தற்போதுள்ள சட்ட முறைமையின் கீழ் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு எந்தவொரு தடையும் கிடையாது.

2. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்த பொது காப்புறுதி நிறுவனங்களினால் மோட்டார் வாகன விபத்து தொடர்பாக எந்தவொரு சட்ட ரீதியான பொறுப்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கருணையுதவி (Ex-gratia) அடிப்படையில் இந்த இழப்பீடு வழங்கப்படுகின்றது. பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி நிறுவனங்கள் இணைப்பு 01 இல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மோட்டார் வாகன விபத்து ஏற்பட்ட வாகனத்திற்கு உரிய காப்புறுதிப் பத்திரத்தில் உள்ள பந்தியொன்றை அல்லது நிபந்தனையொன்றை மீறீனால் அல்லது தவறினால், இந்த முறையின் கீழ் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு தடைகளேதுமில்லை.

<u>இந்த முறைமையின் கீழ் மூன்றாந்தரப்பினர் எனக் கருதப்படும் நபர்கள்</u>

3. கீழே (5),(6) மற்றும் (7) ஆம் பந்திகளின் கீழ் குறிப்பிடப்படும் நபர்கள் தவிர்ந்த, மோட்டார் வாகன விபத்திற்கு முகம் கொடுத்து மரணத்திற்கு உள்ளான அல்லது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 2 (அ) விற்கு அமைவாக நிரந்தர ஊனத்திற்கு உள்ளான நபர்கள்.

இழப்பீடு வழங்கப்படும் முறை

4. பாதிக்கப்பட்டவர் அல்லது அவரின் சட்ட ரீதியான உரிமையுள்ளவர்களுக்கு கீழ்வருமாறு இழப்பீடு வழங்கப்படும்

அ. பாதிக்கப்டப்பட்டவர் மரணமடைந்த போது (மரணமடைந்தவர் 18 வயதுக்கு மேற்பட்ட நபராக இருத்தல் வேண்டும்)

1. பாதிக்கப்பட்டவர் திருமணமானவர் எனின், அவருடைய வாழ்க்கைத்துணைக்கும் வயது குறைந்த பிள்ளைகளக்கும்

2. பாதிக்கப்பட்டவர் திருமணமாகதவர் எனின், அவருடைய பெற்றோர்களுக்கு.

ஆ. பாதிக்கப்பட்டவர், இங்கு ‘‘இணைப்பு 2(அ)’’ வில் குறிப்பிடப்பட்டவாறு, நிரந்தர, முழுமையான/ பகுதியளவிலான ஊனத்திற்கு உள்ளாகியுள்ள சந்தர்ப்பத்தில், பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்கப்படும். பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீட்டினை வழங்கமுடியாத சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டவருக்குப் பதிலாக கீழே குறிப்பிட்ட நபருக்கு இழப்பீடு வழங்கப்படும்.

(1) பாதிக்கப்பட்டவர் வயது குறைந்தவராக அல்லது திருமணமாகதவராக இருந்தால், அவருடைய பெற்றோருக்கு அல்லது
(2) பாதிக்கப்பட்டவர் திருமணமானவர் எனின், அவருடைய வாழ்க்கைத்துணைக்கும் அல்லது வாழ்க்கைத்துணை மரணித்திருந்தால் அவருடைய பிள்ளைகளுக்கு.

இந்த முறைமைக்கு தகைமை பெறாத தரப்பினர்

5. மோட்டார் வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக மரணமடையும் அல்லது நிரந்தர ஊனமடையும் அந்த வாகனத்தின் சாரதி, ஊழியர் மற்றும் பயணம் செய்பவர்கள்.

6. இழப்பீட்டைப் பெறும் நோக்கத்துடன் அல்லது வேண்டுமென்று வாகனத்தில் மோதி மரணமடையும் அல்லது நிரந்தர ஊனத்திற்கு உள்ளாகும் நபர்.

7. பயங்கரவாத செயற்பாடு அல்லது கலவரம் என்பவற்றுக்கு தொடர்புடைய வாகனங்களில் ஏற்படும் மரணமடையும் அல்லது நிரந்த ஊனத்திற்கு உள்ளாகும் நபர்.

இழப்பீட்டின் அளவு

8. இந்த இழப்பீட்டு முறையின் கீழ் ஒரு விபத்துக்கு பாதிக்கப்பட்ட ஒருவருக்கு கீழே உள்ளவாறு இழப்பீடு வழங்கப்படும்.

(அ) மரணத்தின் போது, ரூபா ஐந்து இலட்சமும் (ரூபா 500,000.00),

(ஆ) இங்கே ''இணைப்பு 2(அ)'' வில் குறிப்பிட்டவாறு, நிரந்தர, முழுமையான/ பகுதியளவில் ஊனமடைந்த சந்தர்ப்பத்தில், ரூபா ஐந்து இலட்சம் (ரூபா 500,000.00) உச்சளவாக, அதில் குறிப்பிடப்பட்ட வரையறைக்கு அமைவாகவும் இழப்பீடு வழங்கப்படும்

இழப்பீட்டை வழங்குவதற்கான நியமம் மற்றும் நிபந்தனைகள்

9.
(அ) உரிய விபத்து நடந்த வாகனத்திற்கு குறைந்தபட்சம் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்ட காப்புறுதி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மூன்றாந்தரப்பு மோட்டார் காப்புறுதி இருத்தல் கட்டாயமானதாகும்.

(ஆ) மரணம் அல்லது நிரந்தரமான முழுமையான/ பகுதியளவில் ஊனம், உரிய மோட்டார் வாகன விபத்தின் காரணமாக ஏற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(இ) விபத்து நடந்து 12 மாதங்களினுள், மரணம் அல்லது நிரந்தரமான முழுமையான/ பகுதியளவில் ஊனம் ஏற்பட்டிருந்தல் அல்லது ஏற்பட ஆரம்பித்திருத்தல்

(ஈ) மரணம் அல்லது நிரந்தரமான முழுமையான/ பகுதியளவில் ஊனம் ஏற்பட்டு 06 மாதங்களினுள் உரிய காப்புறுதி நிறுவனத்திடம் இழப்பீட்டைக் கோருதல் வேண்டும்.

<u>இழப்பீட்டுக்கு விண்ணப்பித்தல்</u>

10. இந்த முறையின் கீழ் இழப்பீட்டிற்கு விண்ணப்பிப்பதற்கான முறையை விளக்கும் அறிவுறுத்தல் அடங்கிய விண்ணப்பப்படிவம் ''இணைப்பு 02'' இல் உள்படுத்தப்பட்டுள்ளது.

நீதிமன்றத்திற்கு செல்லும் உரிமை

11. இந்த விருப்பத்தேர்வு இழப்பீட்டு முறைமையின் கீழ் இழப்பீட்டினைப் பெற்றுக்கொண்ட பாதிக்கப்பட்டவர் அல்லது அவருடைய சட்ட ரீதியான உரிமையானருக்கு, ஏற்பட்ட இழப்பீட்டுக்கு ஏற்ப கிடைக்கப்பெற்ற இழப்பீடானது போதுமானமாக இல்லை எனக் கருதும் சந்தர்ப்பத்தில், உரிய இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நீதிமன்றத்தின் ஊடாக வழக்கினைக் கோப்பிடுவதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

12. அவ்வாறான வழக்கொன்றின் போது, பாதிக்கப்பட்டவருக்கு சார்பாக நீதிமன்றம் தீர்ப்பினை வழங்கும் போது, இந்த இழப்பீட்டு முறையின் கீழ் வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையின் கருத்தில்

கொண்டு, இறுதி இழப்பீட்டினைத் தீர்மானிக்குமாறு நீதிமன்றத்தைக் கோருவதற்கு காப்புறுதி நிறுவனத்திற்கு வாய்ப்புள்ளது.

13. இந்த முறைமையின் கீழ் இழப்பீட்டை வழங்குவதன் ஊடாக, உரிய காப்புறுதி ஒப்பந்தத்தின் பிரகாரம் எழும் ஏதேனும் உரிமைக்கு காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக கோப்பிடப்படும் வழங்கில் அந்த உரிமையை எதிர்த்து வாதிடுவதற்கு காப்புறுதி நிறுவனத்திற்கு உள்ள உரிமைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படமாட்டாது.

முரண்பாடுகளைத் தீர்த்தல்

14. பாதிக்கப்பட்டவர் அல்லது அவருடைய சட்டரீதியான உரிமையாளர் மற்றும் காப்புறுதி நிறுவனம் என்பற்றுக்கு இடையில் இந்த முறைமையின் கீழ் இழப்பீடு தொடர்பாக ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்த்தல், வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன், அதற்காக, சட்ட ஏற்பாடுகள் செய்யப்படும் வரை, முரண்பாடுகளைத் திருத்தல் காப்புறுதி ஒம்புட்ஸ்மனினால் மேற்கொள்ளப்படும். (காப்புறுதி ஒம்புட்மனின் விபரங்கள் “இணைப்பு 02” “விண்ணப்பத்திற்கான அறிவுறுத்தல்” என்பதன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.)

இந்த முறைமை பயனுறுதி பெறும் திகதி

15. 01 மார்ச் 2024ஆம் திகதியில் இருந்து ஏற்படும் மோட்டார் வாகன விபத்துகளுக்கு இந்த முறையின்படி இழப்பீட்டைப் பெற முடியும்.

பணிப்பாளர் நாயகம்
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் நியமத்திற்கு அமைவாக

தொலைபேசி: + 94 11 2396181
dg@ircsl.gov.lk | www.ircsl.gov.lk

இணைப்பு 01

இலங்கை காப்புறுதி ஒழுங்குறுத்தல் ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்ட பொதுக் காப்புறுதி கம்பனிகள் (01.03.2024ம் திகதி வரை)

	பெயர்	விலாசம்	தொலைபேசி
1	எலைன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட	மாடி 25-27, வன் கோல் பேஸ் டவா், இல. 1A, மத்திய வீதி, கோல் பேஸ், கொழும்பு 02	2317900 / 2132007
2	அமானா டக்காபுல் பிஎல்சி	660- 1/1 காலி வீதி, கொழும்பு 03	2597430
3	சிலிங்கோ ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட்	செலிங்கோ ஹவுஸ், 3வது மாடி, இல. 69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01	4702702
4	கொன்டினென்டல் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட்	இல. 79, சீ டபிள்யூ டபிள்யூ கன்னங்கர மாவத்தை, கொழும்பு 07	5200611
5	கோப்பரெட்டிவ் இன்சூரன்ஸ் கம்பனி பிஎல் சி	கோப்பரெட்டிவ் இன்சூரன்ஸ் ஹவுஸ், இல. 74/5 கிரேன்ட்பாஸ் வீதி, கொழும்பு 14	2557300-8
6	பெயார்பெஸ்ட் இன்சூரஸ் லிமிடட்	எக்சஸ் டவர் II, இல. 278/4, யூனியன் ப்ளேஸ், கொழும்பு 02	2428428
7	எச்என்பி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட்	ஐஸ்லன்ட் பிசினஸ் சென்டா், இல. 30, ஸ்ரீ உத்தரானந்த மாவத்தை, கொழும்பு 03	4793701
8	எல் ஓ எல் சி ஜெனரல் இன்சூரன்ஸ் பி எல் சி	இல. 481, டி பீ ஜாயா மாவத்தை, கொழும்பு 10	5004500
9	எம்பிஎஸ்எல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட்	இல. 581, டி பீ ஜாயா மாவத்தை, கொழும்பு 10	2304500
10	தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்	இல. 95, சித்தமபலம் ஏ காடினா் மாவத்தை, கொழும்பு 02	2026600 / 2323007
11	ஓரியன்ட் இன்சூரன்ஸ் லிமிடட்	இல. 133, நியூ புலா்ஸ் வீதி, கொழும்பு 04	2030311
12	பீப்பள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி	இல. 07, ஹெவ்வொக் வீதி, கொழும்பு 05	2126126
13	சனச ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட் இல.	172, எல்விடிகல மாவத்தை, கொழும்பு 08	2003000
14	இலங்கை இன்சூரன்ஸ் கோப்பரேசன் ஜெனரல் லிமிடட்	இல. 21, வொக்சோல் வீதி, கொழும்பு 02	2357709

மேற் குறிப்பிட்ட கம்பனிகளின் மேலதிக தகவல்கள் இலங்கை காப்புறுதி ஒழுங்குறுத்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும். (www.ircsl.gov.lk)

இணைப்பு 02

மோட்டார் வாகன விபத்தின் ஊடாக மூன்றாம் தரப்பிரனருக்கு ஏற்படும் மரணம் அல்லது நிரந்தர ஊனம் என்பவற்றுக்கு இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கான விருப்பத்தேர்வு முறை

இழப்பீட்டு விண்ணப்பப்படிவம்

குறிப்பு: இதில் குறிப்பிட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக வாசித்து விளங்கிக்கொண்டதன் பின்னர் இந்தப் படிவத்தை பூர்த்திசெய்யவும்.

பிரிவு 01

விண்ணப்பதாரியின் விபரங்கள்

1.1 முழுமையான பெயர் : …………………………………………………………………………………

1.2 தபால் முகவரி : …………………………………………………………………………………….

………

1.3 தொழில் :……………………………………………………………………………………………….

1.4 தொழில்புரியுமிடத்து முகவரி:……………………………………………………………………...

………

1.5 தொடர்புகொள்ளும் தொலைபேசி எண்:

கைத்தொலைபேசி……………………… நிலையான தொலைபேசி………………………..

1.6 பிறந்த திகதி: வருடம்……………. மாதம்:………………….. திகதி:……………

1.7 தேசிய அடையாள அட்டை இலக்கம்:……………………………………………………………..

1.8 பால் : ………………………………………………………………………..

1.9 திருமண நிலை :…………………………………………………………

1.10 மரணமடைந்தவர்/ நிரந்தர ஊனமுற்றவருடனான உறவு முறை: …………………………………

பிரிவு 02

மரணமடைந்தவர்/ நிரந்தர ஊனமுற்றவர் பற்றிய விபரம்

2.1. முழுமையான பெயர் : ………………………………………………………………………………

……….

2.2 தபால் முகவரி : …………………………………………………………………………………

………

2.3 தொடர்புகொள்ளும் தொலைபேசி எண்: ………………………………………………………..

2.4 பிறந்த திகதி: வருடம்……………. மாதம்:………………….. திகதி:……………

2.5 தேசிய அடையாள அட்டை இலக்கம்:……………………………………………………………..

2.6 பால் : …………………………………………………………………………..

2.7 திருமண நிலை் :………………………………………………………

2.8 வாழ்க்கைத் துணையின் முழுமையான பெயர்: …………………………………………………

2.9 பிள்ளைகள் இருப்பார்களாயின், ஒவ்வொரு பிள்ளையினதும் முழுப்பெயர் மற்றும் வயது:

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

2.10 பெற்றோர்கள் உயிருடன் இருப்பார்களாயின், தந்தை மற்றும் தாயின் பெயர்:

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

பிரிவு 03

விபத்துப் பற்றிய விபரங்கள்

3.1. விபத்தின் தன்மை : மரணம் …………………………… படுகாயம்:…………………

3.2 விபத்து நடந்த திகதி: வருடம்………………… மாதம்:………………….. திகதி:…………….

3.3 விபத்து நடைபெற்ற நேரம் : மு.ப / பி.ப :……………………………………………………..

3.4 விபத்து நடைபெற்ற இடம் : ………………………………………………………………………

3.5 விபத்தின் காரணமாக, காயமடைந்தவர் / மரணமடைந்தவர் தவிர்த்து வேறு நபர்கள் காயமடைந்து/ மரணமடைந்திருப்பின், அவர்களின் பெயர் (தெரியுமாயின்)

…………………………………………………………………………………………………….

……………………………………………………………………………………………………..

3.6 விபத்து நடந்த இடம் அமைந்துள்ள மாவட்டம் : ………………………………………………….

3.7 விபத்து தொடர்பாக அறிவிக்கப்பட்ட பொலிஸ் நிலையம்:…………………………………………..

3.8 விபத்து தொடர்பாக பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்த திகதி :

வருடம்………………… மாதம்:………………….. திகதி:…………….

3.9 விபத்து தொடர்பாக அறிவிக்கப்பட்ட நேரம்: மு.ப/ பி.ப …………………………………………

3.10 விபத்து பொலிஸில் பதிவுசெய்த இலக்கம் : …………………………………………………….

3.11 விபத்து நடைபெற்ற வாகனத்தின் விபரம் (விபத்து அறிக்கையிடப்பட்ட பொலிஸ் நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும்):

- வாகனத்தின் வகை : …………………………………………….
- *வாகன இலக்கம் : …………………………………………….

- *அந்த வாகனம் காப்புறுதி செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனம் :…………………………..

- காப்புறுதிப் பத்திர இலக்கம்: ……………………………………………………………….

(*கட்டாயமாக பூர்த்திசெய்யப்பட வேண்டும்)

3.12 விபத்தினை ஏற்படுத்திய வாகன சாரதியின் விபரங்கள் (விபத்து அறிக்கையிடப்பட்ட பொலிஸ் நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும்):

- முழுமையான பெயர் : ………………………………………………………………………

……………………………………………………………………………………………..

- தேசிய அடையாள அட்டை இலக்கம் : ………………………………………………………….

பிரிவு 04

மருத்துவ சாட்சி

நோயாளியை வைத்தியசாலையில் சேர்த்ததும் வாட்டுக்குப் பொறுப்பாக இருந்த வைத்தியரினால் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

4.1 நோயாளியின் பெயர்: ………………………………………………………………….

4.2 வைத்தியசாலையின் பெயர்:…………………………………………………………….

4.3 வைத்தியசாலையில் சேர்த்த திகதி: ………….. வெளியேறிய திகதி:……………………

4.4 காயத்தின் தன்மை: ……………………………………………………………………

4.5 நிரந்திர ஊனத்திற்கு ஆளாகியுள்ளார்/ ஆளாகவில்லை என்பது: ……………………………..

4.6 உரிய நிரந்தர ஊனத்தின் தன்மை, இழப்பீட்டு முறைக்குரிய ஊனப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட எந்தக் காயத்திற்கு உரியது எனத் தெரிவிக்கவும் (இணைப்பு 2(அ) வின்படி)

……………………………………………………………………………………………

4.7 வேறு விடயங்கள்: ………………………………………………………………………

வைத்தியரின் பெயர்:………………………………………………………………………….

வைத்தியரின் கையொப்பம்: ……………………………………………………………….

உத்தியோகபூர் முத்திரை:

*குறிப்பு : மேலே மருத்துவர் எனப்படுபவர் இலங்கை வைத்திய சபையில் பதிவுசெய்த வைத்தியர் அல்லது ஆயர்வேத வைத்திய சபையில் பதிவுசெய்த வைத்தியர் எனக் கருதப்படுகின்றார்.

மேற்குறிப்பிட்ட விபரங்கள் எனது அறிவுக்கெட்டியவரையில் சரியானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம் திகதி

கிராம சேவகர் மற்றும் பிரதேச செயலாளரின் சான்றிதழ்

மேலே குறிப்பிட்ட ……………………………………………………………………………(பெயர்).எனும் விண்ணப்பதாரியை நான் அறிவேன் எனவும், கிராமத்தில் நிரந்தரமாக வசிப்பவர் எனவும், மேற்குறிப்பிட்ட நபரினால் பூர்த்திசெய்யப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கொட்டியபடி உண்மையானதும் சரியானதும் என சான்றுபடுத்துகின்றேன்.

……………………………………….. ……………………………..

கிராம சேவை அலுவரின் கையொப்பம் திகதி

உத்தியோகபூர்வ முத்திரை

……………………………………….. ……………………………..

பிரதேச செயலாளரின் கையொப்பம் திகதி

உத்தியோகபூர்வ முத்திரை

விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்

1. மோட்டார் வாகன விபத்தின் காரணமாக மூன்றாந்தரப்பு நபருக்கு ஏற்படும் மரணம் அல்லது நிரந்தரமான ஊனம் என்பவற்றுக்கு இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமான விருப்பத்தேர்வு முறைபற்றி விரிவான விபரங்கள் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைர்க்குழுவினால் 26.02.2024ஆம் திகதி வெளியிடப்பட்ட 2024ஆம் ஆண்டு 03ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு www.ircsl.lk வெப் தளத்தைப் பார்வையிடுங்கள்.

2. பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் கீழே குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் பிரதேச செயலாளரினால் சான்றழிக்கப்பட்ட பிரதிகளுடன் (மூல ஆவணம் அவசியம் எனக் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் தவிர்த்து) உரிய விபத்து நிகழ்ந்த வேளையில் வாகனம் காப்புறுதி செய்யப்பட்ட காபபுறுதி நிறுவனத்திற்கு, மரணம் அல்லது நிரந்தர ஊனம் ஏற்பட்டு **06 மாதங்களினுள்** பாரமளிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்துடன் உரிய ஆவணங்களின் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்தும் ஆவணத்தை காப்புறுதி நிறுவனத்திடம் பெற்றுக்கொள்ள மறக்க வேண்டாம்.

3. இந்த விருப்பத்தேர்வு முறைக்குரிய உரிய விண்ணப்பத்தை கீழ் வருமாறு பெற்றுக்கொள்ள முடியும்.

i. அனைத்து பொலிஸ் நிலையத்திலும்
ii. அனைத்து பிரதேச செயலகங்களிலும்
iii. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு வளாகத்தில், 11 ஆவது மாடி, கிழக்கு கோபுரம், உலக வர்த்தகமையம், கொழும்பு 01 அல்லது www.ircsl.lk வெப்தளம் அல்லது IRCSL Facebook பக்கத்தில் நுழைவதன் ஊடாக
iv. வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபைக் காரியாலயம், போக்குவரத்து அமைச்சு, இலக்கம் 01, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10
v. www.roadsafty.gov.lk வெப்தளம் அல்லது "roadsafty sri lanka" Face book பகக்கத்தில் நுழைவதன் ஊடாக
vi. அனைத்து பொதுக் காப்புறுதி நிறுவனங்களின் கிளைகளில்

4. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள பொதுக் காப்புறுதி நிறுவனங்களின் விபரங்கள் www.ircsl.lk வெப்தளத்தில் உள்ளது.

5. உரிய நிறுவனத்தினால் இழப்பீடு வழங்குதல் நிராகரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது கொடுக்கப்படும் இழப்பீடு இந்த இணைப்பு 2(அ) வில் குறிப்பிடப்பட்ட வீதத்தில் இணங்காத போது, இது தொடர்பாக மேன்முறையீடு ஒன்றினை காப்புறுதி ஒம்புட்ஸ்மனுக்கு வழங்க முடியும். காப்புறுதி ஒப்புட்ஸ்மனின் விபரங்கள் கீழ்வருமாறு,

முகவரி: காப்புறுதி ஒம்புடஸ்மன்
காப்புறுதி ஒம்புட்ஸ்மன் அலுவலகம்
இலக்கம் 143ஏ, வஜிர வீதி
கொழும்பு 05.
தொலைபேசி : +9411 250 5542/ + 94 11 2505041
மின்னஞ்சல் : info@insuranceombudsman.lk
வெப்தளம் : https://insuranceombudsman.lk

6. இந்த முறை தொடர்பாக மேலதிக விபரங்களை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் 0112396188 எனும் ஹொட்லைன் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பத்துடன் கீழ்வரும் ஆவணங்களை பிரதேச செயலாளரினால் சான்றுபடுத்திய பிரதிகளுடன் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப் பிரதியுடன் உரிய காப்புறுதி நிறுவனத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

நிரந்தர ஊன இழப்பீட்டிற்கு

(1) விண்ணப்பதாரியின் மற்றும் விபத்துக்குள்ளான நகரின் தேசிய அடையாள அட்டையின் சான்றுபடுத்திய பிரதி ;
(2) பொலிஸ் அறிக்கை (விபத்து அறிவிக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தினால் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும் (மூலப் பிரதி)) ;
(3) வைத்தியசாலையினால் வழங்கப்பட்ட நோய் விபரங்கள் உள்ளடக்கிய துண்டு (Diagnostic card) (வைத்தியரின் பெயர், கையொப்பம், முத்திரை மற்றும் திகதி உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்) மற்றும் ஏனைய வைத்திய அறிக்கைகளின் சான்றுபடுத்திய பிரதி ;
(4) விண்ணப்பதாரியின் மற்றும் விபத்துக்குள்ளான நபரின் பிறப்புச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதி ;
(5) விண்ணப்பதாரி விபத்துக்குள்ளான நபரின் வாழ்க்கைத் துணை எனில், திருமணச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதி.

மரண இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் கீழ்வரும் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(1) மரணச் சான்றிதழ் மற்றும் மரணப் பரிசோதகரின் அறிக்கையின் சான்றுபடுத்திய பிரதி;
(2) மரணமடைந்தவரின் பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதிகள் (மரணமடைந்த போது 18 வயதுக்கு குறைவான ஆண் பிள்ளைகள் மற்றும் 20 வயதுக்கு குறைவான பெண் பிள்ளைகளின் பிறப்புச்சான்றிதழ்கள் மட்டும்) ;
(3) மரணமடைந்தவர் திருமணமாகதவர் எனில், அதனை சான்றபடுத்துவதற்கு உரிய பிரதேச செயலாளரினால் சான்றுபடுத்தப்பட்ட கிராம சேவகரின் சான்றிதழ் அல்லது உரிய முறையில் தயாரிக்கப்பட்ட சத்தியக்கடதாசி (* மூலப்பிரதி).

நிரந்தரமான (முழுவதுமான / பகுதியான) அங்கவீனத்தை ஏற்படுத்தும் காயங்களுக்கான பட்டியல் மற்றும் அதன் நட்டஈட்டிற்கான உரிய சதவீதங்கள்

நிரந்தரமானதும் குணப்படுத்த முடியாததுமான அவயங்களின் பாரிசம் அல்லது நிரந்தரமாக படுக்கையில் இருப்பதனை விளைவாக்குகின்ற ஊறுகள்	100
நிரந்தரமாகவே வேலை செய்ய முடியாத நிலையில் முடிந்ததான நிரந்தரமான குணப்படுத்த முடியாததான உளத்திறன் இழப்பு அல்லது நிரந்தரமாகவே வேலை செய்யமுடியாத நிலையினை ஏற்படுத்தும் வேறு ஏதேனும் ஊறு	100
கண் ஊறுகள்	
(i) இரண்டு கண்களினதும் கண் பார்வையினை முழுமையாக இழத்தல்	100
(ii) ஒரு கண்ணின் கண் பார்வையினை முழுமையாக இழத்தல்	80
கேள்விப்புலன் ஊறுகள்	
(i) கேள்விப்புலன் முழுமையாக இழத்தல்	80
(ii) ஒரு காதில் கேள்விப்புலனை முழுமையாக இழத்தல்	50
பேச்சை இழத்தல்	
(i) பேச்சை முழுமையாக இழத்தல்	100
உணர்திறன் இழப்பு	
(i) மணமும் சுவையும் அறியும் புலன்கள் முழுமையாக இழத்தல்	60
(ii) மணம் அறியும் புலனை முழுமையாக இழத்தல்	60
(iii) சுவை அறியும் புலனை முழுமையாக இழத்தல்	60

முன்னங்கை ஊறுகள்

(i) முழங்கையோடு அல்லது முழங்கைக்கு மேலேயிருந்து முன்னங்கையினை இழத்தல்	85
(ii) முழங்கையோடு அல்லது முழங்கைக்குக் கீழேயிருந்து முன்னங்கையினை இழத்தல்	80

கை ஊறுகள்

(i) இரண்டு கைகளையும் இழத்தல்	100
(ii) கையினை இழத்தல் அல்லது பெருவிரலையும் நாலு விரல்களையும் இழத்தல்	80
(iii) பெருவிரல் (இருமொழிகளும்)	50
(iv) பெருவிரல் (ஒரு மொழி)	40
(v) நாலு விரல்களையும் இழத்தல்	80

சுட்டு விரல் இழத்தல்

(i) மூன்று மொழிகள்	50
(ii) இரண்டு மொழிகள்	40
(iii) ஒரு மொழி	20

நடு, மோதிர மற்றும் சின்ன விரல்களை இழத்தல்

(i) மூன்று மொழிகள்	30
(ii) இரண்டு மொழிகள்	20
(iii) ஒரு மொழி	15

காலை இழத்தல்

(i) முழங்காலில் அல்லது முழங்காலுக்கு மேலே	90
(ii) முழங்காலில் அல்லது முழங்காலுக்கு கீழே	80

பாதத்தின் ஊறுகள்

(i) இரண்டு பாதங்களையும் இழத்தல்	100
(ii) ஒரு பாதத்தினை இழத்தல்	90

கால் விரல்களை இழத்தல்

(i) கால் பெருவிரல்-இரு மொழிகளும்	40
(ii) கால் பெருவிரல்-ஒரு மொழி	20
(iii) கால் பெருவிரல் தவிர்ந்த விரல்களில் ஒன்றுக்கு அதிகமானதை இழந்தால், ஒவ்வொன்றும்	20

நானாவிதமானவை

(i) பாலுறுப்புக்களை முழுமையாக இழத்தல்	75
(ii) பாலுறுப்பினை பகுதியளவில் இழத்தல்	60
(iii) முகத்தினை மோசமாக வடுப்படுத்தல் அல்லது உருவழித்தல்	90
(iv) அதிகபட்ச அளவொன்றுக்கு, முகத்தினை வடுப்படுத்தல் அல்லது உருவழித்தல் தவிர்ந்த மோசமான உடல்சார்ந்த உருவழித்தல்	60
(v) ஒரு பல்லை இழத்தல்	10
(vi) மேலே குறிப்பிடப்படாததான (உதாரணம் மூக்கு, மார்பு, காது முதலியன) ஏதேனும் உறுப்பின் அல்லது அதன் பாகத்தின் இழப்பு, மருத்துவ அலுவலர் ஒருவரால் மதிப்பீடு செய்யப்படவேண்டிய அதிகபட்சமானது.".	60

Annexure - B

<u>මෝටර් වාහන අනතුරු මගින් තුන්වන පාර්ශවීය වින්දිතයන්ට සිදුවන මරණ හෝ ස්ථිර අබලතා සඳහා වන්දි ලබාගත හැකි විකල්ප ක්‍රමවේදය</u>

<u>පොලිස් වාර්තාව</u>

පොලිස් ස්ථානයේ නම:..

ලිපිනය: ....

1. අනතුර සිදු වූ දිනය: ....
2. අනතුර සිදු වූ වේලාව සහ ස්ථානය: ....
3. අනතුරට පත් වාහන අංකය: ....
4. රථ වාහන රක්ෂණ සහතික අංකය: ....
5. රක්ෂණ ආයතනයේ නම: ....
6. රක්ෂිතයාගේ නම සහ ලිපිනය: ....
7. මෙකී අනතුර නිසා මරණයට හෝ ස්ථිර අබලතාවයට පත් වූ තුන්වන පාර්ශවීය (මෙම විකල්ප ක්‍රමවේදය අදාල වන) පුද්ගලයා ගැන විස්තර:

(i) සම්පූර්ණ නම:..

(ii) ජාතික හැඳුනුම්පත් අංකය: ....

(iii) මරණයට ලක් වූයේ ද, තුවාල ලැබුවේද යන වග: ....

(iv) තුවල ලබා ඇති ශරීර අංග: ....

(v) තුවාල වල ස්වභාවය:..

(vi) අනතුරට ලක් වූ පුද්ගලයා පාරේ ගමන් කරමින් සිටි අයෙක්ද පාපැදියක යමින් සිටි අයෙක් ද යන වග: ....

8. අනතුර සිදු වූ ස්ථානයට ගොස් පරීක්ෂා කළ/ නොකළ බව:..

9. රියදුරුගේ විස්තරය:

(i) නම හා ලිපිනය:

....

....

(ii) රියදුරු බලපත්‍ර අංකය: ....

(iii) නිකුත් කළ දිනය: ....

10. මෙම අනතුර සිදු වී ඇති ආකාරය:

(i) අනතුරට ලක් වූ තුන්වන පාර්ශවීය වින්දිතයා අනතුර විස්තර කළ ආකාරය:

....

....

....

(ii) අනතුරට හේතු වූ මෝටර් වාහනයේ රියදුරු අනතුර විස්තර කළ ආකාරය:

....

....

....

(iii) අනතුර සිදු වූ ස්ථානයට ගිය පොලිස් නිලධාරියා නිරීක්ෂණය කළ තොරතුරු:

....

....

....

දිනය:.................................

....

ස්ථානභාර නිලධාරී (නිල මුද්‍රාව)